**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 - (அம்பத்தளை சக்தி சேமிப்பு செயற்திட்டம்) - 2018**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை சக்தி சேமிப்பு செயற்திட்டம்) 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரன்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008 -01 பி ஆம் இலக்க கடன் வவதி உடன்படிக்கையின் 3.4.2(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்பொதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்**

---

என்னுடைய அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 12,292 மீற்றர்கள் குழாயில் வேலைகளால் சேதமாக்கப்பட்ட 05 வீதிகளின் மீளமைத்தலிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாணவீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு செய்யப்பட்ட ரூபா 402.80 மில்லியன் கூட்டுத் தொகையான கொடுப்பனவுகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23.56 மில்லியன் கிரயத்தில் சீதாவத்தையில் 687 மீற்றர்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் புர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட வேலைகளின் கிரயமாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | 379.24 | பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் கிரயம் அதிகரித்துக்கூறல் | முறைபடி கருத்துரைகள் தெரிக்கப்படவில்லை | செய்யப்பட்ட வேலைகளின் கிரயமாக உள்ளபடியான பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் கிரயம் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் சார்பில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் ஏற்பட்ட நிர்வாகச் செலவினம் செயற்திட்டத்தால் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | 5.48 | செயற்திட்டத்தின் கிரயம் குறைத்துக்கூறல். | கருத்துரைகள் தெரிக்கப்படவில்லை | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு ஏற்பட்ட சகல கிரயங்களும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். |

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமில் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 அந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு 2019 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுமென வேண்டப்பட்ட 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூன் 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது | பிரதான வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இணங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | தேவையான வேண்டுகைகளை பின்பற்ற வேண்டும். |

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

கொத்தட்டுவவில் நீர்த்தேக்கம் மற்றும் அமுக்க நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணம், அம்பத்தளை முதல் எலியகவுஸ் நீர்த்தேக்கம் வரையான 90 கிலோமீற்றர் நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்களை வழங்கு குழாயிடல், உற்பத்தி வசதிகளிற்கான புனரமைப்பு தரமுயர்தல் மற்றும் மின்சக்தி சேமிப்பு, உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல் மற்றும் வடிவமைப்புகளை மீளாய்வு செய்தல் போன்ற பெயருடைய 05 கூறுகளைக் கொண்டுள்ளது. செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னெற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் கூறுகளின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேறம் முறையே 10.84 சதவீதம் மற்றும் 11.67 சதவீதம் மெதுவாக இருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | அம்பத்தளை முதல் எலியகவுஸ் நீர்த்தேக்கம் வரையான 09 | 9,000 மீற்றர் குழாயிடலில், 1,316 | ஒப்பந்த காலப்பகுதி | கைதவிப்பு பெறுகைகளின் குறைவு | திருத்தப்பட்ட திட்டம் தயாரிப்பதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிலோமீற்றர் நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்களை வழங்கி குழாயிடல் | மீற்றர்கள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டது. | நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை | காரணமாக வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்கள் வழங்கி பொருத்தலுடன் கோத்தட்டுவவில் நீர்த்தேக்கம் மற்றும் அமுக்க நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணம் | ஒப்பந்தகாரர் 2018 சனவரி 04 இல் ஒப்பந்தம் கைசாத்திட்டடிருந்த பொதிலும் 2018 ஆகஸ்ட் 31 வரையும் வேலையை தொடங்கியிருக்காததுடன் 2019 யூலை 12 இல் ஒப்பந்தமும் நிறுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதி நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை | தகராறுகள் எழுந்தமை காரணமாக ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு வேலைகளை மீள தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அம்பத்தளை உற்பத்தி வசதிகளிற்கான நம்பகமான தரமுயர்தல் மற்றும் மின்சக்தி சேமிப்பு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை காட்டியிருக்கவில்லை. | அம்பத்தளை சுத்திகரிப்பு பொறியின் முன்னேற்றத்தில் தாமதம் | வடிவமைப்பு வேலைகளில் சிறிய தாமதம் இருந்ததுடன் ஒப்பந்தகாரர் தாமதத்தை தடுப்பதற்கு அவசிமான அறிவுறுத்ல்கள் வழங்கப்பட்டிருந்தது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான திருத்தப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு உற்பத்தி வசதிகளிற்கான புனரமைப்பு தரமுயர்தல் மற்றும் சக்தி சேமிப்பு | கொள்வனவு நடைமுறைகள் தொடங்கப் பட்டிருக்கவில்லை | உபகரணங்கள் தாதங்களாக வழங்குதல் | நிதிகளின் பற்றாக்குறையால் கொள்வனவில் தாமதம் இடம்பெற்றது. | முன்னரே உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 70 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியிலிருந்து 52 மாதங்கள் கடந்த பின்னர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15.50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,693.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.86 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால, ரூபா 227.89 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் கடனளிக்கும் முகவரால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்தது. | கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணம் அறவிடுவதற்கான சாத்தியத்தன்மை | ஒப்பந்தம் வழங்குவதில் மெதுவான முன்னேற்றம் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் என்பவற்றின் மெதுவான முன்னேற்றம் காரணமாக கடனளிக்கும் முகவர் நிதிகளை நிறுத்தியிருந்தார். | செயல்நடவடிக்கை திட்டத்தை கடைப்பிடித்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதிகளை பயன்படுத்தல் என்பவற்றிற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 செப்தெம்பர் 19 இல் வழங்கப்பட்ட நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்கள் வழங்கி பொருத்தலுடன் கோத்தட்டுவவில் நீர்த்தேக்கம் மற்றும் அமுக்க நீரிறைக்கும் நிலையத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ஒப்பந்தகாரரால் முகம்கொடுத்த நிதிப்பிரச்சனைகள் காரணமாக 2018 ஆகஸ்ட் வரை வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஒப்பந்தமானது 2019 யூன் 12 இல் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2019 யூலை 31 வரையும் புதிய ஒப்பந்தகாரரை தெரிவுசெய்வதற்கு அமுலாக்கல் | மறுபாடில்லாத கொள்வனவு நடைமுறைகள் பிரயோகிப்பதில் ஏற்பட்ட நட்டங்கள் | இருக்கின்ற ஒப்பந்தங்களை இடைநிறுத்தாமல் ஒரே செயற்திட்டத்திற்கு புதிய ஒப்பந்தகாரரை தெரிவுசெய்வது சாத்தியமற்றது. | அமுலாக்கல் மற்றும் நிறைவேற்றல் முகவர்கள் ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர்களின் கடந்தகால செயலாற்றல் மற்றும் நிதி இயலுமைகளை கவனம் செலுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகவரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டமானது அதன் குறிப்பிடத்தக்களவு பௌதீக முன்னேற்றம் காட்டாமல் தீர்ப்பனவுக் கட்டணமாக ரூபா 18.37 மில்லியன் செலுத்துவதற்கு வெளியேறும் ஒப்பந்தகாரருடன் உடன்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2016 யூலை 01 இல் தொடங்கப்பட்ட அம்பத்தளை முதல் எலயகவுஸ் நீர்த்தேக்கம் வரை நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்கள் வழங்கி பொருத்தலிற்கான ஒப்பந்தம் 2018 செப்தெம்பர் 01 இல் இடை நிறுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கிரயத்திற்கான சாத்தியம் | செயற்திட்டமானது வேலைகளை திரும்ப தொடங்குவதற்கு 2019 சனவரி 04 இல் ஒப்பந்தகாரருடன் குறைநிரபு உடன்படிக்கைக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | உரிய வேலைகள் 2019 யூன் 30 வரையும் தொடங்கப் பட்டிராதமையால் ஒப்பந்தகாரருக்கு தேவையான ஆலோசனை வழங்க வேண்டும். |
| (ஈ) | 2018 யூலை 16 இல் நடுவர் தீர்ப்பு சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டமானது வெளிநாட்டு நாணய கோரிக்கைகளின் தீர்ப்பனவிலுள்ள தாதம் காரணமாக, அம்பத்தளை முதல் எலியகவுஸ் நீர்த்தேக்கம் வரையான 90 கிலோமீற்றர் நுருப்பிடிக்காத இரும்பு குழபாய்களை வழங்கி குழாயிடலில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரருக்கு ரூபா 13.66 மில்லியன் தொகையான நிதிக் கட்டணங்களை தீர்ப்பதற்கு நெறிப்படுத்தப்பட்டது. | பயனற்ற செலவினம் | ஒப்பந்த உடன்படிக்கையில் நிபந்தனைரீதியான ஒழுங்குகள் காரணமாக இந்த தொகை ஏற்பட வேண்டியிருந்தது. | எதிரிகாலத்தில் செயற்திட்டங்கள் அத்தகைய கிரயங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | வடிவமைப்பை மீளாய்வு செய்தல் மற்றும் ஆலோசனை சேவைகளிற்கான ஒப்பந்தம் 2016 சனவரில் வழங்கப்பட்டதுடன் 2016 யூன் 01 இல் வேலைகள் | மேலதிக கிரயத்திற்கான சாத்தியம் | ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதிலுள்ள தாமதம் காரணமாக பிரதான ஆலோசனை உத்தியோகத்தர் | திருத்தப்பட்ட வேலை திட்டத்தின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேலைகளின் முன்னேற்றம் பிரதான ஆலோசனை நிபுணர்களை ஈடுபடுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50.42 சதவீதமாக இருந்தது. | | செயற்திட்ட வேண்டுகையின் படி முறையாக தொழிலை ஆரம்பித்திருந்தது. | ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கி ஒப்பந்தகாரர் வேலைகள் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

**3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கட்டுப்பாடுகள் நலிவாக இருக்கும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது | தேவையான வேண்டுகைகளை பின்பற்ற வேண்டும். |